# IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

## Pr.O.P.No. 80/2023

சாட்சி : PW– 3

பெயர் : திரு. பாலசுப்பிரமணியம் தேதி : 17.12.2024

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை**:– (1, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில்)

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல சாட்சி அழைப்பாணை வரவில்லை. என்னை வத்சலாதேவி என்பவர் சாட்சி சொல்ல அழைத்து வந்தார். வத்சலாதேவி மற்றும் அவரது கணவர் ஆகியோர்களை எனக்கு 35 வருடங்களாக தெரியும். வத்சலாதேவியின் வீட்டிலிருந்து சுமார் 3 வீடுகள் தள்ளி நான் குடியிருக்கிறேன். ராமு என்பவருக்கு 4 பெண்களும் ஒரு மகனும் வாரிசுகளாக உள்ளனர். உயிலில் சாட்சி கையொப்பம் செய்ய என்னை ராமு என்பவர் அழைத்தார். 06.02.2020 ம் தேதி காலை 10 மணிக்கு ராமு என்னை சாட்சி கையொப்பம் செய்ய அழைத்தார்.

உயில் அம்மாபேட்டையில் வைத்து எழுதப்பட்டது. உயில் எழுதும் சமயத்தில் நானும், ராமு, செல்லதுரை, வழக்கறிஞர் ரவிச்சந்திரன், தட்டச்சர் பழனியப்பன் ஆகியோர்கள் இருந்தோம். உயில் வாசகங்களை ராமு என்பவர் ரவிச்சந்திரனிடம் கூறினார். பழனியப்பன் தட்டச்சு செய்தார். உயில் எழுதிய சமயத்தில் ராமுவின் வாரிசுகள் யாரும் உடன் இருக்கவில்லை. சுப்பாராவ் அலுவலகத்தில் வைத்து உயிலில் கையெழுத்து செய்தேன். உயிலில் முதலில் ராமு என்பவர் கையெழுத்து செய்தார். இரண்டாவதாக செல்லதுரை என்பவர் கையெழுத்து செய்தார். மூன்றாவதாக நான் கையெழுத்து செய்தேன். நான்காவதாக ரவிச்சந்திரன் கையெழுத்து செய்தார். உயிலில் சுப்பாராவ் நோட்டரி கையெழுத்து செய்தார். உயில் மொத்தம் 5 பக்கங்கள் உடையது ஆகும். ஒரு ரூ.20/– மதிப்புள்ள தாள், பச்சை கலர் தாள்கள் 4 உடையது ஆகும். ராமு என்பவர் முத்திரை தாளை வாங்கி வந்தார்.

ராமு என்பவர் 5 பக்கங்களில் கையெழுத்து போட்டார். உயில் எழுதியபொழுது ராமு என்பவருக்கு உடல்நிலை சரியில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் உயிலை படித்துப் பார்க்கவில்லை. உயிலை ராமு என்பவரே எடுத்துச் சென்றுவிட்டார். உயில் எழுதிய விவரத்தை ராமுவின் வாரிசுகளிடம் நான் சொல்லவில்லை. நான் உயிலில் கையெழுத்துபோட்டுவிட்டு கிளம்பிவிட்டேன். ராமு என்பவர் மாரடைப்பு ஏற்பட்டு இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். ராமு இறந்ததற்கு துக்கம் விசாரிக்க நான் சென்றேன். செல்லதுரை உயில் பற்றி சொல்லவேண்டாம் என என்னிடம் சொன்னார். அதனால் துக்கம் விசாரிக்க சென்றபொழுது உயில் பற்றி சொல்லவில்லை. காரியம் முடிந்தபிறகு உயில் பற்றி சொல்லிக்கொள்ளலாம் என செல்லதுரை கூறினார். நான் எதுவும் உயில் பற்றி சொல்லவில்லை. பழைய இடத்தின் பத்திரத்தை வைத்து சொத்து விவரம் எழுதப்பட்டது. அந்த பழைய பத்திரத்தை நான் படித்துப் பார்க்கவில்லை. சொத்தின் விஸ்தீரணம் 550 சதுர அடி ஆகும். சொத்து தாதகாப்பட்டியில் உள்ளது.

**குறுக்குவிசாரணை**:– ( 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் பிரதிநிதித்துவம் இல்லாததால் ஒத்திவைக்கப்படுகிறது )

Sd./- N. Ramakrishnan
I Additional District Judge,
Salem.